நகரமன்றம் குடியாத்தம் நாள் : 10.05.2018

# அறிவிப்பு

2018–ம் ஆண்டு மே மாதம் 10–ம் தேதி வியாழன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்ச் நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெறும்

**முன்னிலை : திரு.ச.செல்வபாலாஜி, பி.இ., நகரமன்ற தனி அலுவலர்**

## நிகழ்ச்சி நிரல்

1. இந்நகராட்சியில் TURIP 2018-19 திட்டத்தின் கீழ் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக தார்சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க மற்றும் புதுப்பிக்க வேண்டி ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டிலான கீழ்காணும் பணிகளுக்கு திட்டபிரேரணை தயார்செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற வேண்டி பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Providing BT Surface and CC Paver Block with Drain to Zubedha Nagar, Gosha Gulamudeen Street, Janumiyan Street, Asanalipet, Bharathiyar Street, V.P.Kovil Street, Kaspa Pudumanai, Sakthi Nagar, Thangala Ramasamy Street, Asan Street, Neeli Govindappan Street, JC Street, S.Kuppannan Street, Raja Nagar, Teacher's Colony, Sathya Nagar, R.S.Nagar, Arunachalam Nagar, Arun Nagar, Nehruji Nagar 1st&2nd Street, Lakshmi Garden in Ward No.1,2,5,7,8,9,10,11,12,13&14 | 250.00 |
| 2 | Providing BT Surface and CC Paver Block with Drain to Viswanathan Nagar, Sedukkarai Perumal Kovil Street, OM Sakthi Street, Raja Ganapathy Nagar, Undiyal Dharmaiyan Street, Mannadi Ramasamy Street, Gandhi Road, Rajendira Singh Street, Gowdanya Causeway and Melpatti Road, Gangai Amman Nagar, Siddhi Vinayagar Kovil Street, NSK Nagar main Road, Sannathi Street, Sannathi Thoppu Street, Match Factory Thoppu Street, Andiyappa Mudali Street(Vavval Thoppu) Periyar Nagar, Bosepet Newt Street, Narayanasamy Thoppu Street, Thangam Nagar, Thiruvalluvar Vinayagar Kovil Street, Nethaji Street, Periyappu Mudali Street Lane and Bhuvaneswari Nagar in Ward No.3,9,14,15,16,17,22,23,24,26,28,29,30,32, 33,34,35,&36 | 250.00 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக ஒப்புதல் பெறவும், தலைமை பொறியாளர், சென்னை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் திட்டத்திற்கு அரசு மான்யமாக ரூ.500.00 இலட்சம் பெற்று திட்டம் நடைமுறைபடுத்த மன்றம் அனுமதிக்கலாம்.
4. வரவு செலவு திட்டம் 2018-19-ன் கீழ் ஒப்புதல் வழங்கலாம். **ந.க.எண்:-** இ1/1139/2018

2. இந்நகராட்சியில் வேலூர் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் ரூ.8640.00 இலட்ச மதிப்பீட்டில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முழுவதுமாக நிறைவு செய்யப்பட்டு டிசம்பர் 2015 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கானொலி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் கூடுதலாக தினசரி 7.00 மில்லியன் லிட்டர் வீதம் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான பசுமாத்தூர் நீரேற்று நிலையத்திலிருந்து தினசரி 1.25 மல்லியன் லிட்டர் ஆக மொத்தம் 8.25 மில்லியன் லிட்டர் பெறப்பட்டு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் குடிநீர்

வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இந்நகராட்சியில் 20510 சொத்து வரி கேட்புகள் உள்ளன. மேற்படி கேட்புகளில் இந்நாள் வரை 9550 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் 9433 வீட்டு குடிநீர் இணைப்புகளும், 117 இணைப்புகள் வணிக பயன்பாட்டிற்கும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பழைய இணைப்புகளை புதியதாக பதிக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோக பகிர்மான குழாயில் மாற்றி அமைக்கவும், மீதமுள்ள 10960 புதிய குடிநீர் இணைப்புகளை புதியதாக பதிக்கப்பட்டுள்ள பகிர்மான குழாயில் வழங்கவும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு திட்ட மதிப்பீடு ரூ.218.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டதை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5 அவர்களுக்கு மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டு மன்ற அனுமதிவேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.இ2/8806/2008

3. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் சேகரமாகும் குப்பைகள் உடனுக்குடன் அகற்றவேண்டி மொத்தமுள்ள 17912 குடியிருப்புகளில் 400 குடியிருப்புகளுக்கு 1 பேட்டரியில் இயங்கும் மூன்று சக்கர சைக்கிள் வாகனம் வாங்குவதற்கு குப்பைகள் சேகரம் செய்யும் பொருட்டு முதற்கட்டமாக 16 எண்ணிக்கையிலான பேட்டரியில் இயங்கும் வாகனம் கொள்முதல் செய்ய ஆகும் மதிப்பீடு தொகை ரூ.26.88 இலட்சத்திற்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அரசுமான்யம் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5, அவர்களுக்கு திட்டபிரேரணை அனுப்ப மன்ற நிர்வாக அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-** அரசு மானியமாக திடக்கழிவு மேலாண்மை (SWM) திட்டத்தின் கீழ் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்:-** இ1/581/2016

4. இந்நகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் அம்மா உணவகத்தில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம், கொதிகலன் அடுப்பு, குளிர்சாதன பெட்டி பழுதடைந்துள்ளதை சரிசெய்வதற்கும், பாத்திரங்கள் வாங்குவதற்கும் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்த மதிப்பீடு தொகை ரூ.2,25,000/-(GST வரி உட்பட)-க்கு மன்ற நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் முன் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று முன்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்:-** இ1/399/2017

5. இந்நகராட்சியில் 2017 - 2018 ஆம் ஆண்டு **பொது நிதி** திட்டத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 13.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விவரம்** | **ஒப்பந்தப்புள்ளி விவரம்** |
|---|---|---|
| 1 | குடியாத்தம் நகராட்சி நேரு பூங்கா மற்றும் இராபின்சன் குளக்கரையில் உரக்குழி அமைத்தல் (Composting Pit)<br>மதிப்பீட்டு தொகை ரூ.2,95,000/- | 1. JKN Builders – 0.00% மதிப்பீட்டை விட குறைவு<br>2. DCN Construction – 0.13% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | குடியாத்தம் நகராட்சி ஆர்.எஸ்.சாலை பச்சையம்மன் கோவில் எதிரில் மழைநீர் வடிகால் அமைத்தல்<br>மதிப்பீட்டு தொகை ரூ.3,65,000/- | 1. JKN Builders – 0.06% மதிப்பீட்டை விட குறைவு<br>2. DCN Construction – 0.17% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:-** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தபுள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்:-** இ1/399/2017

6. இந்நகராட்சியில் 2017 - 2018 ஆம் ஆண்டு **கல்வி நிதி** திட்டத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 06.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விவரம்** | **ஒப்பந்தப்புள்ளி விவரம்** |
|---|---|---|
| 1 | நகராட்சி மேல்நிலைப்பள்ளி கட்டிட பின்புறம் சிமெண்ட் தளம் அமைத்தல் | 1. Senthil Constructions – 0.01% மதிப்பீட்டை விட குறைவு |

| | | |
|---|---|---|
| | மதிப்பீட்டு தொகை ரூ.6,00,000/- | 2. DCN Construction – 0.02% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலககுறிப்பு:-** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தபுள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்:-** இ1/2918/2015

7. இந்நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்காக காவேரி கூட்டு குடிநீர் திட்டம் பயன்பாட்டில் உள்ளது. இதர்புரம் கூட்டு குடிநீர் திட்ட மின்மோட்டார் பழுதடைந்து குடிநீர் விநியோகம் பாதிப்படைந்ததின் பேரில் உடனடியாக பசுமாத்தூர் உள்ளூர் குடிநீரி ஆதாரம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. இதில் போடிப்பேட்டை, சந்தப்பேட்டை மற்றும் மேல்நிலைப்பள்ளி நீர்

தேக்க தொட்டிகளுக்கு நீர் ஏற்றம் செய்ய வழிவகை இல்லாத காரணத்தால் அப்பகுதிகளுக்கு டிராக்டர் மூலம் நகராட்சி குடிநீர் ஆதாரத்திலிருந்து (159டிரிப்) குடிநீர் விநியோகம் செய்தமைக்கு ஆன செலவினம் ரூ.56,445/-ஐ ஒப்பந்ததாரர் திரு.பஙீ திருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன் மூலம் பணி மேற்கொண்டு தொகை வழங்குவதை மன்றத்தின் பதிவிற்கும் தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-** குடிநீர் விநியோக அவசியம் கருதி மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொண்டு விலைப்புள்ளி பெற்று அதனடிப்படையில் பணி மேற்கொண்டு செலவின தொகை வழங்குவதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். **ந.க.எண்:** இ1/399/2017

8. இந்நகராட்சி உள்ளி உரக்கிடங்கினை மண்டல நகராட்சிகளின் இயக்குநர், வேலூர் அவர்கள் ஆய்வின்போது குப்பை தரம் பிரிக்கும் விண்ரோஸ் சுற்றியிலும் வெளியுள்ள குப்பைகள் விண்ரோஸ் மேல் வராமல் இருக்கவும், மூன்று பக்கம் கம்பி வலைபோட அறிவுறுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் மேற்படி இடத்தினை நேரடி ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதில் உத்தேச மதிப்பீடு ரூ.68,000/- செலவாகும் என்பதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-** குப்பைகள் தரம் பிரிக்க ஏதுவாக கம்பிவலை அமைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

1. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். **ந.க.எண்:** இ1/399/2017

9. இந்நகராட்சி குடிநீர் விநியோகத்தின் போது பொதுமக்களுக்கு குளோரின் கலந்த குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு கீழ்க்காணும் மூன்று இடங்களில் திரவ குளோரின் கலத்தல் இயந்திரம், மின்மோட்டார்கள் அமைக்க வேண்டி உள்ளது.

1. செதுக்கரை தரைநீர் தேக்க தொட்டி (10.00LL) – 1 Unit
2. சித்தூர் கேட் மேநீர் தேக்க தொட்டி (10.00LL) – 1 Unit
3. பசுமாத்தூர் தலைமை நீரேற்று நிலையம் (10.00LL) – 1 Unit

மேற்காணும் 3 பகுதியில் Liquid Chlorination Plant அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7.75 இலட்சத்திற்கு மன்ற நிர்வாக அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. பொதுமக்களின் சுகாதார அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரவு செலவு திட்டம் 2018-19-ன் கீழ் ஒப்புதல் வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று முன்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். **ந.க.எண்:** இ1/399/2017

10. இந்நகராட்சி ஆர்.எஸ்.சாலையில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு அவருடைய 127-வது பிறந்தநாள் வருகிற ஏப்ரல் மாதம் 14-ம் தேதி (2018-ம் ஆண்டு) கொண்டாடப்படவுள்ளதால் அம்பேத்கர் சிலை மற்றும் வளாகத்திற்கு புதியதாக வண்ணம் பூச்சுதல் மற்றும் பராமரிப்பு பணிகள் 1.5எச்.பி பேனல் போர்டு சர்வீஸ் ஒயர் பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம்

| வ.எண் | விலைப்புள்ளி வழங்கியவர்களின் முகவரி மற்றும் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.டி.டி.ராமகிருஷ்ணன், ஒப்பந்ததாரர்<br>எண்.18, பாவோடும் தோப்பு தெரு,<br>நெல்லூர்பேட்டை, குடியாத்தம் | 27,700 |

| | | |
|---|---|---|
| 2 | திரு.ஜெ.ஜெ.ஆனந்தகுமார், ஒப்பந்ததாரர்<br>எண்.24இ, ஆர்.எஸ்.ரோடு, குடியாத்தம் | 28,000 |
| 3 | திரு.சுரேஷ் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர்<br>எண்.34, எஸ்.குப்பண்ணன் தெரு, பிச்சனூர், குடியாத்தம் | 28,500 |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள வரிசை எண்.1-ல் உள்ள திரு.டி.டி.ராமகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கி பணியினை செய்து முடித்ததையும் அதற்கான தொகை ரூ.27,700/- செலவினத்தையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-** மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்:** இ1/399/2017

11. இந்நகராட்சியில் 2017 - 2018 ஆம் ஆண்டு **பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி நிதி** திட்டத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 27.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விவரம்** | **ஒப்பந்தப்புள்ளி விவரம்** |
|---|---|---|
| 1 | Supply and fitment of LED Luminaire (80 Watt) with fittings and display board 5 units in ward no.31 at Gudiyatham Municipality<br>மதிப்பீட்டு தொகை ரூ.1,05,000/- | 1. T.S.Solar Power System – 0.38% மதிப்பீட்டை விட குறைவு<br>2. V.S.T.Agencies – 5.42% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | Supply and fitment of LED Luminaire (80 Watt) with fittings and display board 15 units in ward no.2 (Muslim Area) at Gudiyatham Municipality<br>மதிப்பீட்டு தொகை ரூ.3,15,000/- | 1. T.S.Solar Power System – 0.38% மதிப்பீட்டை விட குறைவு<br>2. V.S.T.Agencies – 5.42% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலககுறிப்பு:-** வரப்பெற்ற ஒவ்வொரு இனத்திற்கான இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தபுள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்:-** இ1/1035/2017

12. இந்நகராட்சியில் 2017 - 2018 ஆம் ஆண்டு **பொது நிதி** திட்டத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 27.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விவரம்** | **ஒப்பந்தப்புள்ளி விவரம்** |
|---|---|---|
| 1 | வார்டு எண்.17 திலகர்தெருவில் சிறுபாலம் அமைத்தல்<br>மதிப்பீட்டு தொகை ரூ.2,00,000/- | 1. Sri Angaalaparameswari Agencies & Contractors - 0.08% மதிப்பீட்டை விட குறைவு<br>2. Sri Angaalaparameswari Welding Works - 0.05% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வார்டு எண்:35 எம்.ஜி.ஆர்.சிலை பின்புறம் மழைநீர் வடிகால் அமைத்தல்<br>மதிப்பீட்டு தொகை ரூ.1,50,000/- | 1. J.J.Anandakumar – 0.03% மதிப்பீட்டை விட குறைவு<br>2. DCN Construction – 0.09% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | தாழையாத்தம் பஜாரில் நகராட்சிக்கு சொந்தமான 3 கடைகளில் பராமரிப்பு பணி செய்தல்<br>மதிப்பீட்டு தொகை ரூ.1,50,000/- | 1. Sri Angaalaparameswari Agencies & Contractors - 0.04% மதிப்பீட்டை விட குறைவு<br>2. Sri Angaalaparameswari Welding Works - 0.14% மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | பநீ கெங்கையம்மன் திருவிழாவிற்கு தற்காலிக கழிப்பிடம், ஒளிரும் விளக்குகள் மற்றும் குடிநீர் வசதி பணிகள் செய்தல்<br>மதிப்பீட்டு தொகை ரூ.2,54,000/- | 1. J.J.Anandakumar – 0.02% மதிப்பீட்டை விட குறைவு<br>2. DCN Construction – 0.33% மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு</u>:-** வரப்பெற்ற நான்கு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தபுள்ளிகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்:-** இ1/399/2017

13. இந்நகராட்சி ஆணையாளர் குடியிருப்பில் கடந்த ஓர் ஆண்டு காலமாக(2017) ஆணையாளர் பணியிடம் காலியாக இருந்து வந்ததால் மேற்படி ஆணையர் குடியிருப்பில் யாரும் தங்காமல் பூட்டியே வைக்கப்பட்டு பராமரிப்பின்றி இருந்து வந்த காரணத்தால் அங்குள்ள மின்சார ஒயரிங் பழுதடைந்து மின்சாதனங்கள் பயனற்ற நிலையில் உள்ளது. மற்றும் தண்ணீர் வரும் குழாய் பைப்புகளில் அடைப்பு ஏற்பட்டு பயன்படுத்த முடியாமல் இருந்ததால் தண்ணீர்வசதி இல்லாத நிலை ஏற்பட்டது.

மேலும் தற்பொழுது செங்கோட்டை நகராட்சியில் இருந்து பதவி உயர்வு பெற்று 04.04.2018-ம் தேதியன்று குடியாத்தம் நகராட்சி புதிய ஆணையாளர் அவர்கள் பதவி ஏற்றுகொண்டதால் ஆணையர் அவர்கள் தங்கும்படியாக மேற்படி பராமரிப்பின்றியுள்ள ஆணையாளர் விடுதியில் பழுதடைந்த மின்சார ஒயரிங் மற்றும் மின்சாதனபொருட்கள் மற்றும் UPS வசதி ஏற்படுத்தவும் குழாய் அடைப்புகளை சரிசெய்யவும் மேற்படி பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டி பணியின் அவசர அவசியம் கருதி பணிக்கு தேவையான ஆட்கள் மற்றும் பொருட்களை நேரிடையாக பெற்று பணியினை செய்து முடிக்க சிறுதொழில் உரிமம் பெற்ற (Natinal Small Industries corporation ltd) நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் நிறுவனமான M/s.பநீ அங்காள பரமேஸ்வரி ஏஜென்சிஸ் மற்றும் கான்ட்ராக்டர்- குடியாத்தம் அவர்களுக்கு பணி/சப்ளை உத்தரவு வழங்கி ஆணையர் குடியிருப்பினை பயன்பாட்டிற்கு கொண்டுவரபட்டதிற்கான செலவு தொகை ரூ.68,735/-ஐ வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**<u>அலுவலககுறிப்பு</u>:-** 1.மன்றம் அனுமதிக்கலாம். 2.நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்படி தொகையினை வழங்கலாம். **ந.க.எண்:-** இ1/399/2017

14. இந்நகராட்சியில் 2017 - 2018 ஆம் ஆண்டு **பொது நிதி** திட்டத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 04.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | Supply and Fixing of Liquid Chlorination Plant in Sedukkarai, Chittoor Gate OHT & Pasumathur Headworks<br>மதிப்பீட்டு தொகை ரூ.7,75,000/- | 1. Sri Sabari Engineering - 0.06% மதிப்பீட்டை விட குறைவு<br>2. Sri Raja Ganapathy Engineering Works - 0.23% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | குடியாத்தம் நகராட்சி அம்மா உணவகத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல்<br>மதிப்பீட்டு தொகை ரூ.2,25,000/- | 1. J.J.Anandakumar – மதிப்பீட்டு விகிதம்<br>2. T.T.Ramakrishnan – 0.27% மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு</u>:-** வரப்பெற்ற இரண்டு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தபுள்ளிகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம். மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்:-** இ1/399/2017

15. இந்நகராட்சியில் பணிபுரியும் பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் வரும் காலம் மழைக்காலம் எனவே, மேற்படி பணியாளர்களுக்கு மழை கோட் 2017-18-ம் ஆண்டிற்கு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், சிட்கோ தொழிற்பேட்டை, அம்பத்தூர் என்ற நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யவும், மழை கோட் வாங்க ஆகும் தோராய செலவு ரூ.1.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**<u>அலுவலக குறிப்பு</u> :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3285/2015/எச்1)

16. இந்நகராட்சியில் பணிபுரியும் பொது சுகாதாரப்பிரிவு துப்புரவுப் பணியாளர்கள், துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒட்டுநர்களுக்கு 2016-17-ம் ஆண்டிற்கான காலனிகள் அரசு அங்கிகாரம் பெற தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், சிட்கோ தொழிற்பேட்டை, அம்பத்தூர் என்ற நிறுவனத்தின் மூலம்

கொள்முதல் செய்யவும், காலனிகள் வாங்க ஆகும் தோராய செலவு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3285/2015/எச்1)

17. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வரும்காலம் மழை காலமாக உள்ளதால், கொசு ஒழிப்புப்பணி நடைப்பெற்று வருகிறது. வேலூர் மாவட்டத்தில் தற்போது வைரஸ் காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் அதிக அளவில் பரவி வருவதால், அவற்றை கட்டுப்படுத்தும் விதமாக, முதிர்வு கொசுக்களை கட்டுப்படுத்த மிகவும் அவசியமாக கீழ்க்கண்ட மருந்துக்கள் தேவைப்படுகிறது. அதற்கான விலைப்புள்ளியை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் Roc.No.7232/J2/2016 நாள் : 11.07.2017-ன் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற தமிழ்நாடு மருத்துவ கழகம், சென்னை அவர்களின் கடிதம் Ref.No.019/M(P)/INSECT/ TNMSC/2015 நாள் : 12.01.2016-ல் 5 வகையான மருந்துகளுக்கு விலை நிர்ணயம் செய்தும், நிறுவனங்களின் விவரங்களும் குறிப்பிட்டு வரப்பெற்றுள்ளது.

1. PYRETHRUM 2% EXTRACT 100liters x 993 = Rs.99300/- (Paramunt Pesticides limited)
2. A.Abate 100liters x 569 = Rs.56900/- (HERANBA INDUSTRIES LTD)

GST 18% = Rs.28116 /-

**Grant Total = Rs.184316 /-**

மேற்படி நிறுவனத்திடமிருந்தும் மருந்துகள் கொள்முதல் செய்ய ஆகும் செலவு ரூ.184316/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, அவசர அவசியம் கருதி பொது சுகாதாரத்தை முன்னிட்டு, பொது மக்களின் நலன் கருதியும், தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளவும் மேற்படி நிறுவனத்தின் மூலம் மருந்துகள் நேரடி கொள்முதல் செய்யவும், அதற்கான செலவுத் தொகையும் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.எச்1/2140/2011)

18. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஸ்ரீ கருப்புலீஸ்வரர் ஆலய சித்திரை திருவிழா மற்றும் ஸ்ரீ கெங்கையம்மன் திருவிழா, கொசு ஒழிப்புப்பணி ,பொது இடங்களில் உள்ள புதிய மற்றும் பழைய பேருந்து நிலையங்களுக்கும் தேவையான பொருட்கள் 1.சுண்ணாம்பு நீர் - 5 டன் ரூ.32500/-, பிளீச்சிங் பவுடர் - 3டன் ரூ.92400/- பினாயில் - 50 லிட்டர் ரூ.10000/-, ஆக மொத்தம் ரூ.1,34,900/- கொள்முதல் செய்ய ஆகும் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கவும் CO-OP.MARKETING SOCIETY LTD, GUDIYATHAM என்ற நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்யும், அதற்கான செலவுத் தொகையும் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.எச்1/3771/2011)

**19.** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரியும் திரு. சீனிவாசன் த/பெ. தேவதாஸ் என்பவர் தனது சொந்த ஊரான அரக்கோணம் நகராட்சிக்கு பணி மாறுதல் கோரி விண்ணப்பித்துள்ளார். எனவே, மேற்படி துப்புரவு பணியாளரை குடியாத்தம் நகராட்சியிலிருந்து அரக்கோணம் நகராட்சிக்கு பணி மாறுதல் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகறிது.

**அலுவலக குறிப்பு : மன்றம் முடிவு செய்யலாம். (ந.க.எண்.606/2018/எச்1)**

20. இந்நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு அரசாணை எண்/92/2007-ன்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4)துறை நாள்.03.07.2007-ன்படி 9 ஆண்டுகள் குத்தகை முடிந்த கடைகளுக்கு மார்கெட் மதிப்பு மற்றும் பொதுப்பணித்துறை மதிப்புபடி 86 கடைகளுக்கு வாடகை மறு நிர்ணயம் செய்து அறிவிப்பு கடிதம் சார்வு செய்யப்பட்டது. மேற்படி 86 கடை குத்தகைதாரர்கள் வாடகை குறைக்க கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு 20.11.2017 மற்றும் 28.11.2017-ம் தேதிகளில் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து 86 குத்தகைதாரர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு வழக்கு நகராட்சிக்கு எதிராக திரு.சேகர் த/பெ குமாரசாமி W.A.sr.No.11093/2018, திரு.என்.திருநாதன், த/பெ.நடேசன் W.A.sr.No.11105/2018 திரு.கே.சண்முகம் W.A.sr.No.11101/2018, திரு.கே.ரமேஷ்பாபு W.A.sr.No11097/2018 மற்றும் D.ராஜேந்திரன், த/பெ.தட்சணாமூர்த்தி W.A.sr.No535/2018 ஆகியோர் வழக்கு தொடுத்துள்ளார். எனவே மேற்படி வழக்கில் நகராட்சிக்கு சார்பாக திரு.T.M.பாப்பையா சிறப்பு அரசு வழக்கறிஞர் அவர்கள் சென்னை உயர்நீதி

மன்றத்தில் வழக்காடவும் அதற்கான வழக்கு கட்டணம் ரூ.75,000/-ஐ (வழக்கு 1-க்கு ரூ.15,000/- வீதம் 5 வழக்குக்கு) வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி மேற்படி வழக்கினை ஒப்படைத்தமைக்கும், தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2252/2016/அ1)

21. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 04.05.2017 மற்றும் அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 13.10.2017–ன் படி குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.7, பிளாக்.2, நகரளவு எண்.373/2(ப) (பழைய எண்.217/1,2) 373/3 (பழைய எண்.215/2) 378/2 (பழைய எண்.212/2) 378/4 (பழைய எண்.213/1,2)–ல் 5.43 ½ ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள ஸ்ரீ பெருமாள் நகர் என்ற அனுமதியற்ற மனைப்பிரிவின் உரிமையாளர் மனைகளை வரன்முறைப்படுத்த இணையதளத்தில் விண்ணப்பித்ததை தொடர்ந்து வேலூர் மண்டலம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடித நடவடிக்கைகள் ந.க.எண். 258/2018/வேம3 நாள். 07.03.2018–ல் வார்டு.7, பிளாக்.2, நகரளவு எண்.373/2(ப) (பழைய எண்.217/1,2) 373/3 (பழைய எண்.215/2) 378/2 (பழைய எண்.212/2) 378/4 (பழைய எண்.213/1,2)–ல் 5.43 ½ ஏக்கர் அல்லது 236748.00 சதுரடி பரப்பளவில் அமைந்துள்ள ஸ்ரீ பெருமாள் நகர் என்ற மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ.து.இ (வே.ம) வரன்முறைப்படுத்துதல் எண்.291(R)/18 என எண்ணிடப்பட்டு (தன்னிச்சையாக) மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள து.

**மனைப்பிரிவு ஒதுக்கீடு விபரம்**

| | | |
|---|---|---|
| மனைன் மொத்த பரப்பளவு | – | 236748.00 ச.அடி (அ) 21993.94 ச.அடி (அ) 5.43 ½ ஏக்கர் |
| மனைப்பிரிவின் மனைகள் | – | 174 (21993.94 ச.அடி) |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | – | 82 (90307.00) ச.அடி) |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | – | 92 (98590.00 ச.அடி) |

**பொது ஒதுக்கீடு**

| | | |
|---|---|---|
| பூங்கா – 1 (மனை எண். 7, 8) | – | 1120.00 சதுர அடி |
| பூங்கா – 2 (மனை எண். 11) | – | 810.00 சதுர அடி |
| பூங்கா – 3 (மனை எண். 39,40.41.43.44 ) | – | 7187.00 சதுர அடி |
| பூங்கா – 4 (மனை எண். 71) | – | 825.00 சதுர அடி |
| **மொத்தம்** | – | **9942.00 சதுர அடி** |

மொத்த பூங்கா பரப்பு – 9942.00 ச. அடி (விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவில் 10.08 %)

மேற்படி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது.

மேற்படி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள மனைபிரிவுகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணங்கள் அதாவது மனை எண்கள் (3, 4, 5, 6, 7, 8, 9, 11, 12, 15, 19, 20, 21, 22, 23, 24, 25, 27, 28, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 44, 45, 46, 47, 48, 52, 53, 54, 61, 64, 65, 66, 67, 68, 69, 70, 71, 72, 73, 74, 75, 76, 77, 78, 82, 87, 88, 98, 103, 126, 128, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 141, 142, 143, 144, 145, 146, 147, 148, 149, 150, 151, 152, 153, 154, 163, 164, 165, 166, 170, 172 ) ஆகிய மனைகளின் பரப்பளவு 98590 ச.அடி (அ) 9162.64 ச. மீட்டர் பரப்பளவிற்கு 1 சதுர மீட்டருக்கு ரூ. 60.00 வீதம் ஆக 9162.64 ச. மீட்டருக்கு ரூ.5,49,760/– மனைபிரிவு உரிமையாளரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் வளர்ச்சி கட்டணம் 1 ச.மீட்டருக்கு ரூ. 150.00 வீதம் ஆக 9162.64 ச. மீட்டருக்கு ரூ.13,74,400/–ஐ நகராட்சி கணக்கில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்த பரிந்துரைத்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமை கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தினை நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 836/2017/எப்1)

**22.** இந்நகராட்சியில் உள்ள அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான எழுது பொருட்கள் மற்றும் படிவம் **2018–2019** ஆம் ஆண்டிற்கான அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனங்களில் இருந்து வாங்க ஆகும தோராய செலவு ரூ.**3.00** மூன்று லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.
**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.0676/பி4/2018)**

23. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு லாரி TN23 BQ 2792-க்கு தகுதி சான்று பெறும் பொருட்டு பழுதுக்கள் சரி செய்ய 02.05.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டமைக்கு கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1. | வாலாஜாபேட் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் நிறுவனம், அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் சோளிங்கர், தீது தெரு, வாலாஜாபேட் | ரூ.75200/- |
| 2. | திருப்பத்தூர் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் நிறுவனம் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம், ஆசிரியர் நகர், திருப்பத்தூர் | ரூ.75581/- |
| 3. | காட்பாடி அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் நிறுவனம் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம், வேலூர் ரோடு, காட்பாடி. | ரூ.75705/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1 வாலாஜாபேட் அக்ரோ இன்ஜினியரிங் சர்வீஸ் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று உத்திரவு வழங்க அனுமதிக்கலாம்.
**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கலாம். அதற்கான செலவுத் தொகையையும் பொது நிதியின் கீழ் வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.48/2016/எச்1)

24. குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீடுகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பணிபுரியும் மண்டல மேற்பார்வையாளர் மற்றும் பரப்புரையாளர்களுக்கு 6 மாதங்களுக்கான தொகை ரூ.751254/-யை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.2400/2017/அ3 நாள் : 30.04.2018-ல் தெரிவித்துள்ளபடி, ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியில் கணக்கு எண் :191301000350 செலுத்தப்பட்டுள்ளதை மேற்படி, பணியாளர்களுக்கு மார்ச் - 2018 முதல் ஆகஸ்ட - 2018 வரையிலான கூலி வழங்க மன்ற அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.
**<u>அலுவலக குறிப்பு :</u>** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1629/2017/எச்1)

25. இந்நகராட்சியில் நகர்ப்புற சாலைகள் மேம்பாடு திட்டம் (TURIP) 2018-19-ம் சாலைகள் மற்றும் மழைநீர் கால்வாய் அமைக்க திட்டப்பிரேரணை தயார் செய்து நிர்வாக அனுமதி பெற வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களுக்கு அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் திட்டப்பிரேரணை தயார் செய்வதற்கு Site Plan Auto CAD Drawing மற்றும் Photos ஆகியவற்றினை தயார் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.90,000/-க்கு நிர்வாக அனுமதிக்கு மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.
**<u>அலுவலக குறிப்பு:-</u>**
1. செலவின தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுப்பணி மேற்பார்வையாளர் மூலம் Auto CAD வரைபடம், புகைப்படம்(Photos), தயார் செய்யும் பணி ஆகியவற்றை மேற்கொண்டு உரிய செலவு சீட்டின் பேரில் பொதுப்பணி மேற்பார்வையாளர் மூலம் தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசியம் கருதி முன்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.இ1/1139/2018

**26.** அரசாணை (நிலை) எண். **78**, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். **04.05.2017** மற்றும் அரசாணை (நிலை) எண். **172**, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். **13.10.2017**–ன் படி குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு.**7**, பிளாக்.**2**, நகரளவு எண்.**383**/**1**எ, **1**பி, **1**சி–ல் **1.42** ஏக்கர் பரப்பளவில் அம்பாலால் நகர் என்ற அனுமதியற்ற மனைப்பிரிவின் உரிமையாளர் மனைகளை வரன்முறைப்படுத்த இணையதளத்தில் விண்ணப்பித்ததை தொடர்ந்து வேலூர் மண்டலம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) கடித நடவடிக்கைகள் ந.க.எண். **1981/2017**/வேம**3** நாள். **20.04.2018**–ல் வார்டு.**7**, பிளாக்.**2**, நகரளவு எண்.**383**/**1**எ, **1**பி, **1**சி–ல் **1.42** ஏக்கர் அல்லது **11041.10** சதுரடி பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ.து.இ (வே.ம)

வரன்முறைப்படுத்துதல் எண்.598(R)/2018 என எண்ணிடப்பட்டு (தன்னிச்சையாக) மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**<u>மனைப்பிரிவு ஒதுக்கீடு விபரம்</u>**

| | | |
|---|---|---|
| மொத்த பரப்பளவு | – | 11041.10 சதுர அடி |
| மனைப்பிரிவின் மனைகள் | – | 12 (நகராட்சிக்கு உட்பட்டது) |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | – | – |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | – | 12 |

மேற்படி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது. பூங்கா பகுதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

மேற்படி வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ள மனைபிரிவுகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணங்கள் அதாவது மனை எண்1, 4, 5, 6, 7, 8, 9, 10, 34எ, 35எ, கடை எண்–1, கடை எண்–2 ஆகிய மனைகளின் மொத்தப் பரப்பளவு 1159.40 ச. மீட்டர் பரப்பளவிற்கு 1 சதுர மீட்டருக்கு ரூ. 60.00 வீதம் ஆக 1159.40 ச. மீட்டருக்கு ரூ.69,540/– மனைப்பிரிவு உரிமையாளரால் அரசுக் கணக்கில் 02.05.2018 அன்று செலுத்தப்பட்டுள்ளது. மேலும் வளர்ச்சி கட்டணம் 1 ச.மீட்டருக்கு ரூ. 150.00 வீதம் ஆக 1159.40 ச. மீட்டருக்கு ரூ.1,73,910/–ஐ நகராட்சி கணக்கில் 08.05.2018 அன்று மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்த பரிந்துரைத்து மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி மனைப்பிரிவு வடிவமைப்பு வரைப்படத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவு வரைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமை கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேற்படி மனைப்பிரிவு வரைப்படத்தினை நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்திட மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 836/2017/எப்1)

27. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் தனி நபர் கழிப்பிடம் கட்டுதல், பொது மக்களுக்கு திடக்கழிவுகளை மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பைகளை பிரித்தல் ஆகியவற்றை விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு ஒலி பெருக்கி, புரெஜக்டர் மற்றும் திரை வாங்க 09.05.2018 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விவரம்.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விவரம் | மொத்த தொகை |
|---|---|---|---|
| 1. | PSR Systems,<br>Computer Sale & Service,<br>No.17-31, Anna St,<br>Gudiyatham. | 1) EPSSON S41 PROJECTOR GST 18% 1 Nos Rs.34,400/-<br>2) STANGER CUBE SPEAKER GST 18% 1 Nos Rs.7,300<br>3) STAND AND SCREEN 8X6 GST 18% 1 Nos Rs.8,300 | ரூ.50000/- |
| 2. | Sivam Infotech<br>No.14, Municipal Complex,<br>G.H.Road, Pudupet,<br>Gudiyatham. | 1) EPSSON S41 PROJECTOR 1 Nos Rs.35,250/-<br>2) STANGER SPEAKER AMD MIC 1 Nos Rs.9,000<br>3) STAND AND SCREEN 1 Nos Rs.9,500 | ரூ.53250/- |
| 3. | JAIGANESH COMPUTERS,<br>(Computer Sales & Service)<br>No.15, Anna St, Ambapuram,<br>Gudiyatham. | 1) EPSSON S41 PROJECTOR 1 Nos Rs.36,000/-<br>2) STANGER SPEAKER WITH MIC 1 Nos Rs.10,200<br>3) STAND AND SCREEN 1 Nos Rs.9,400 | ரூ.55600/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1 பி.எஸ்.ஆர் சிஸ்டம், குடியாத்தம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்டத் தொகையை தற்போது பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். IEC Activeties மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு பொது நிதிக்கு மேற்படி தொகை ஈடு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.1182/2018/எச்1.

28. குடியாத்தம் நகராட்சி 1973–ஆம் ஆண்டு முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சியாகும். இதன் மொத்த பரப்பளவு 4.92 சதுர கி.மீ. ஆகும். 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 91558 ஆகும். வார்டு எண்ணிக்கை 36 ஆகும். தற்போது நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 90 நபர்கள். தினசரி சேகரம் ஆகும் குப்பையின் அளவு 25 மெட்ரிக் டன் ஆகும். முதல் நிலை குப்பை சேகரிக்கும் பணிக்கு 12 தள்ளு வண்டிகளும்.65 டிரை சைக்கிள் ரிக்ஷாக்களும், இரண்டாம் நிலை சேகரித்திற்கு 3 டிப்பர் லாரிகள் மற்றும் 2 டம்பர் பிளேசர் வாகனங்களும் பயன்பாட்டில் உள்ளது. மேலும் தனியார் மயம் மூலம் 70 நபர்களை கொண்டு 12 வார்டுகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது தூய்மை இந்தியா திட்டம் 2015–16–ன் கீழ் ரூ.247.50 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சிக்கு சொந்தமான எர்த்தாங்கல் உரக்கிடங்கில் குப்பைகள் தரம் பிரிப்பதற்கான கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

குடியாத்தம் நகராட்சிக்கு சொந்தமான உரகிடங்கு உள்ளி மற்றும் எர்த்தாங்கல் பகுதியில் 14.78 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.மேற்படி உரகிடங்கு பகுதியில் பல ஆண்டுகளாக சேகரிக்கப்பட்டுள்ள மரபுவழி கழிவுகளை(Legacy Waste) திடக்கழிவு மேலாண்மை – தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தாது பொருட்களாக (Bio Mining) மாற்றிட உத்தேசிக்கப்பட்டுள்ளது,

எனவே, மேற்படி இரண்டு உரகிடங்கு பகுதிகளில் உள்ள மரபுவழி கழிவுகளை(Legacy Waste) தாது பொருட்களாக (Bio Mining) மாற்றிட ரூ.1080.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும், மேற்படி பணியினை திடக்கழிவு மேலாண்மை தூய்மை இந்தியா திட்டத்தில் (SBM) மேற்கொள்ள திட்ட பிரேரணையை நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி பெற அனுமதி கோரப்படுகிறது,

**அலுவலககுறிப்பு:-**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான திட்ட பிரேரணையை நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களுக்கு நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,வேலூர் அவர்கள் மூலமாக அனுப்பி நிர்வாக அனுமதி பெற அனுமதி வழங்கலாம்.
3. இந் நகராட்சியில் தினசரி மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய பணிகளுக்கு போதிய நிதி ஆதாரம் இல்லாத நிலையில், மேற்படி பணிக்கான மொத்த மதிப்பீட்டு தொகையினை திடக்கழிவு மேலாண்மை – தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து முழு மான்யமாக (100%) பெற்று மேற்படி திட்டத்தினை செயல்படுத்திட அனுமதிக்கலாம். (ந.க.எண்.இ1/581/2016)

29. இந்நகராட்சியில் 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 91558 ஆகும். உள்ளூர் குடிநீர் திட்டம் (பாலாறு படுகை) மூலம் 1.25MLD–ம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (CWSS) மூலமும் தினசரி 7.00MLD–ம் ஆக மொத்தம் 8.25 MLD பெறப்பட்டு நகர பொது மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 90 லிட்டர் வீதம் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை 30 வார்டுகளும் மற்றும் 6 வார்டுகள் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இம்முறையை மாற்றி தினசரி குடிநீர் விநியோகம் பொதுமக்களுக்கு செய்யும் பொருட்டு நகரில் உள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மற்றும வால்வுகள் புதிதாக பதிக்கவும் ஏற்கனவே 18 வால்வுகள் பழுதடைந்து உள்ளதை, புதியதாக அமைக்கவும் திட்ட மதிப்பீட்டு ரூ.73.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி தொகையை அரசு முழு மான்யமாக பெற்று பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அத்தியாவசிய குடிநீர் பணி என்பதால் ரூ.73.00 முழு மான்யமாக பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 8806/2008/இ2)

30. நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறையில் இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் தனியார் மயம் மூலம் 12 வார்டுகள் (16, 17, 27, 28 29, 30, 31, 32, 33, 34, 35, 36) ஆகிய பகுதிகளில் துப்புரவுப் பணி தனியார் மயமாக்குதலுக்கு அனுமதி 3 ஆண்டுகளுக்கு பெறப்பட்டதன் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.லோகேஷ் என்பவர் பணி செய்யப்பட்டு வருகிறார். தற்போது

இப்பணி 01.06.2018 அன்றுடன் முடிவடைவதால் மீண்டும் 02.06.2018 முதல் ஓராண்டுக்கு துப்புரவுப் பணிகள் தனியார் மயம் மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டி மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1741/2012/எச்1)

**ஆணையாளர் / தனி அலுவலர்,**
**குடியாத்தம் நகராட்சி.**

29. இந்நகராட்சியில் 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 91558 ஆகும். உள்ளூர் குடிநீர் திட்டம் (பாலாறு படுகை) மூலம் 1.25MLD–ம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (CWSS) மூலமும் தினசரி 7.00MLD–ம் ஆக மொத்தம் 8.25 MLD பெறப்பட்டு நகர பொது மக்களுக்கு நாள் ஒன்றுக்கு 90 லிட்டர் வீதம் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை 30 வார்டுகளும் மற்றும் 6 வார்டுகள் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இம்முறையை மாற்றி தினசரி குடிநீர் விநியோகம் பொதுமக்களுக்கு செய்யும் பொருட்டு நகரில் உள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மற்றும வால்வுகள் புதிதாக பதிக்கவும் ஏற்கனவே 18 வால்வுகள் பழுதடைந்து உள்ளதை, புதியதாக அமைக்கவும் திட்ட மதிப்பீட்டு ரூ.73.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி தொகையை அரசு முழு மான்யமாக பெற்று பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

3. மன்றம் அனுமதி வழங்கலாம்.
4. அத்தியாவசிய குடிநீர் பணி என்பதால் ரூ.73.00 முழு மான்யமாக பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். 8806/2008/இ2)

28. குடியாத்தம் நகராட்சி 1973–ஆம் ஆண்டு முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சியாகும். இதன் மொத்த பரப்பளவு 4.92 சதுர கி.மீ. ஆகும். 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 91558 ஆகும். வார்டு எண்ணிக்கை 36 ஆகும். தற்போது நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 90 நபர்கள். தினசரி சேகரம் ஆகும் குப்பையின் அளவு 25 மெட்ரிக் டன் ஆகும். முதல் நிலை குப்பை சேகரிக்கும் பணிக்கு 12 தள்ளு வண்டிகளும்.65 டிரை சைக்கிள் ரிக்ஷாக்களும், இரண்டாம் நிலை சேகரித்திற்கு 3 டிப்பர் லாரிகள் மற்றும் 2 டம்பர் பிளேசர் வாகனங்களும் பயன்பாட்டில் உள்ளது. மேலும் தனியார் மயம் மூலம் 70 நபர்களை கொண்டு 12 வார்டுகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது தூய்மை இந்தியா திட்டம் 2015–16–ன் கீழ் ரூ.247.50 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சிக்கு சொந்தமான எர்த்தாங்கல் உரக்கிடங்கில் குப்பைகள் தரம் பிரிப்பதற்கான கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

குடியாத்தம் நகராட்சிக்கு சொந்தமான உரகிடங்கு உள்ளி மற்றும் எர்த்தாங்கல் பகுதியில் 14.78 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. மேற்படி உரகிடங்கு பகுதியில் பல ஆண்டுகளாக சேகரிக்கப்பட்டுள்ள மரபுவழி கழிவுகளை(Legacy Waste) திடக்கழிவு மேலாண்மை – தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தாது பொருட்களாக (Bio Mining) மாற்றிட உத்தேசிக்கப்பட்டுள்ளது,

எனவே, மேற்படி இரண்டு உரகிடங்கு பகுதிகளில் உள்ள மரபுவழி கழிவுகளை(Legacy Waste) தாது பொருட்களாக (Bio Mining) மாற்றிட ரூ.1080.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும், மேற்படி பணியினை திடக்கழிவு மேலாண்மை தூய்மை இந்தியா திட்டத்தில் (SBM) மேற்கொள்ள திட்ட பிரேரணையை நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி பெற அனுமதி கோரப்படுகிறது,

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

4. அனுமதிக்கலாம்.
5. மேற்படி பணிக்கான திட்ட பிரேரணையை நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களுக்கு நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,வேலூர் அவர்கள் மூலமாக அனுப்பி நிர்வாக அனுமதி பெற அனுமதி வழங்கலாம்.
6. இந் நகராட்சியில் தினசரி மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய பணிகளுக்கு போதிய நிதி ஆதாரம் இல்லாத நிலையில், மேற்படி பணிக்கான மொத்த மதிப்பீட்டு தொகையினை திடக்கழிவு மேலாண்மை – தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து முழு மான்யமாக (100%) பெற்று மேற்படி திட்டத்தினை செயல்படுத்திட அனுமதிக்கலாம். (ந.க.எண்.இ1/581/2016)